## நுவா துசார (ஐ இ டி 18395)




சிறிய தடித்த நெல்மணியும், ஹெக்டருக்கு 3.0 டன் சராசரி மகசூலும் கொண்ட இந்த இரகம், ஒடிசா மாநிலத்தின் தாழ்வான பகுதிகளுக்கு ஏற்ப 2008ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நீண்ட கால பயிரான (145 நாட்கள்) இது, 142 செ.மீ உயரம் வரை வளரகூடியது. இலைஉறை அழுகல் நோய், குலைநோய் மற்றும் துங்க்ரோ வைரஸ் நோய்களை எதிர்த்தும், ஆனைக்யகொம்பன் ஈ-யை மிதமாக எதிர்த்தும் வளரும் திறனுடையது. நீரில் மூழ்கிய நிலையில் 3-4 நாட்கள் வரை தாங்கி வளரும் திறன் கொண்டது.

## கீதாஞ்சலி (சி ஆர் எம் 2007-1)



இந்த மத்திய கால (130 நாட்கள்) இரகமானது, 115 செ.மீ உயரம் வளரக்கூடியது. மேலும், நல்ல மணம் கொண்ட நெல் மணிகளை கொண்டது. ஒடிசா மாநிலத்தில் நடுத்தர மற்றும் நீர்ப்பாசன நிலங்களுக்கு ஏற்ப 2005ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2006ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நீண்ட சன்ன அரிசியை கொண்ட இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.0-4.5 டன்னாகும். குலை நோயை எதிர்த்தும், ஆனைக்கொம்பன் ஈ மற்றும் பழுப்பு இலைப்புள்ளி நோயை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை கொண்டது. மேலும், தூர்கட்டும் பருவத்தில் 20 செ.மீ உயரம் வரை நீர் இருப்பினும் நீர்தேக்கத்தை தாங்கி வளரும் திறன் கொண்டதாகும்.

**தேசிய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ற நெல் இரகங்கள்**

**NRRI Technology Bulletin - 124**

All Rights Reserved, NRRI, ICAR, Sept. 2016

**Editing and Layout:** A. Anandan and Guru Prasana Pandi G

**Photography:** P. Kar and B. Behera

Laser typeset at the Central Rice Research Institute, Indian Council of Agricultural Research, Cuttack (Odisha) 753 006, India and printed at Printech offset, BBSR. Published by the Director, for the Central Rice Research Institute, Cuttack (Odisha) 753 006.

# தேசிய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ற நெல் இரகங்கள்

அ.ஆனந்தன், எஸ்.கே.தாஸ், எஸ்.கே.பிரதான், எம்.கே.கர், எஸ்.எஸ்.சி.பட்நாயக், எல்.பெஹெரா, ஜெ.மேஹெர், பி.சி.மராண்டி, பெ.பன்னீர் செல்வம், எஸ்.லென்கா, கே.சட்டோபாத்யா, ஓ.ன்.சிங், டி.மொகபத்ரா



நெற்பயிரானது பல்வேறு வகையான சுற்றுச் சூழலிலும் வளரக்கூடிய ஒரு முக்கிய உணவு பயிராகும். நன்கு நீர் தேங்கி நிற்க்கூடிய நிலங்கள், வடிகால் வசதியற்ற நிலங்கள், எளிதில் நீர் வடியும் திறனுடைய நிலங்கள் மற்றும் மானாவாரி பகுதி நிலங்கள் என அனைத்து பகுதியிலும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தகுந்த நெல் இரகத்தை அறிந்து தேர்வு செய்து உற்பத்திதிறனை அதிகரிக்கலாம். இந்தியாவில் மட்டுமே இதுவரை 1020க்கும் மேற்பட்ட நெல் இரகங்கள் பல்வேறு சுற்றுசூழலுக்கு ஏற்ப வெளியிடப்பட்டு உள்ளது (நெல் ஆராய்ச்சி இயக்குநரகம், ஹைதராபாத், தொழில்நுட்ப கையேடு எண் 83/2014). இவற்றில், 114 வகையான நெல் ரகங்களை தேசிய நெல் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது. மேலும் இந்த இரகங்களுக்கு தேவையான நீர், ஊட்டச்சத்து, ஒளி, போதுமான இடைவெளி மற்றும் வெப்பநிலை ஆகியவற்றை சரியான முறையில் வழங்குவதன் மூலம், அதிக மகசூல் பெறலாம். இந்த இரகங்கள் பல்வேறு சுற்றுப்புற சூழ்நிலைகளைத் தழுவி வளரக்கூடியவை. நெற்பயிரின் மகசூலானது எந்த நெல் வகையாக இருப்பினும், அதன் விதைத்தல், நடவு செய்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்ற பருவங்களை பொறுத்தே அமைகிறது. இவ்வகை இரகங்களின் வல்லுநர் விதை மற்றும் உண்மைநிலை விதைகளை, தேசிய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், வல்லுநர் விதையானது இந்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத்துறைக்கு விவசாயிகளின் பயன்பாட்டிற்க்காக அனுப்பப்படுகிறது.

இந்த தொகுப்பின் மூலம் தேசிய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பல்வேறு சூழ்நிலைக்கேற்ப வளரும் நெல் இரகங்களை அறிந்து விவசாயிகள் பயன்பெற வேண்டுகிறோம். மேலும், சில மேம்பட்ட பண்புகளை கொண்ட சமீபத்தில் வெளியிடப்பட்ட நெல் இரகங்களையும் இணைத்து விவசாயிகளின் நலனுக்காக வெளியிடுகிறோம்.

## மேட்டுக்கால் நில சூழலுக்கு ஏற்ற புழுதிவிதைப்பு இரகங்கள்

## வரப்புகளற்ற மேட்டுக்கால் நெல்

### அஞ்சலி (ஆர் ஆர் 347-166)




இந்த இரகமானது பீகார், ஜார்க்கண்ட், ஒடிசா, அசாம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் மேட்டுக்கால் நிலபகுதி மற்றும் மானாவாரியில் பயிரிடுவதற்கு ஏற்ப, விரைவில் முதிர்ச்சியடையும் (90 நாட்கள்) வகையில் 2002ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த ரகம் நேரடி விதைப்பிற்கு ஏற்ற இரகமாகும். நடுத்தரமான உயரத்துடன் (85-100 செ.மீ), வறட்சியை தாங்கி வளரும் தன்மையை கொண்டது. இந்த ரகம் நன்கு விதைபிடிப்பு திறன் கொண்டது. இதன் நெல் மணிகள் நீண்ட சன்னரக வகையை சேர்ந்தது. மேலும், பழுப்பு இலைப்புள்ளி நோய் மற்றும் ஆனைக்கொம்பன் ஈக்களை எதிர்த்து வளரும் தன்மையுடையது. இவை மட்டுமல்லாமல், குலைநோய், இலை உறை அழுகல் நோய், தண்டுதுளைப்பான், இலை சுருட்டுப்புழு மற்றும் வெள்ளை தத்துப்பூச்சி ஆகிய நோய் மற்றும் பூச்சிகளை ஓரளவு எதிர்க்கும் திறன்கொண்டது. இதன் சராசரி உற்பத்தி திறனானது, ஹெக்டருக்கு 3.0 முதல் 4.0 டன் ஆகும்.

### வந்தனா (ஆர் ஆர் 167-982)




இந்த ரகமானது ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சோட்டா நாக்பூர் பீடபூமி பகுதியிலுள்ள மேட்டுக்கால் நிலங்களுக்காக 1992ம் ஆண்டு வெளியிடப்பட்டது. விரைவில் முதிர்ச்சியடையும் (90-95 நாட்கள்) தன்மையுள்ள இந்த ரகமானது ஒடிசா மாநிலத்தின் மேட்டுக்கால் நிலங்களிலும் பயிரிட உகந்ததாகும். நடுத்தர உயரம் கொண்ட (95-100 செ.மீ) இந்த ரகம், வறட்சி மற்றும் மண்ணின் அமிலத்தன்மையை தாங்கி வளரும் தன்மையுடையது. நெல் மணிகள் நீண்ட வடிவில் இருக்கும், மேலும் குலைநோய் மற்றும் பழுப்பு இலைப்புள்ளி நோய்களை மிதமாக எதிர்த்து வளரும் திறனுடையது இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 3.5 டன் ஆகும்.

### ஹீரா (சி ஆர் 544-1-2)




இது மிகவும் குறுகிய காலத்தில் முதிர்ச்சியடையும் (70-75 நாட்கள்) திறன் கொண்ட இரகமாகும். இந்த ரகம் ஒடிசா மாநிலத்தில் பயிரிடப்படுவதற்கு 1988ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டு 1989ம் ஆண்டு வெளியிடப்பட்டது. மிகவும் குட்டையான உயரம் (75-85 செ.மீ) கொண்ட இந்த இரகம் மழைகுறைவான மேட்டுக்கால் நிலங்களுக்கு உகந்தது. இந்த ரகமானது முன்கூட்டியே முதிர்ச்சியடைவதால், மழைவெள்ளத்திற்கு பிறகு திட்டமிட்டு பயிரிட ஏற்றதாகும். இது நீண்ட நெல் மணிகளுடன் குலைநோய் மற்றும் ஆனைக்கொம்பன் ஈ ஆகியவற்றை எதிர்த்து வளரும் தன்மையுடையது.

மேலும், இந்த இரகத்தில் புரதச்சத்து அதிக அளவு (12%) உள்ளதால் அரிசியை உணவாக உண்ணும் நாடுகளில் உள்ள மக்களுக்கு புரதச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும். இதன் சராசரி மகசூல் 3.0 முதல் 4.0 டன் ஆகும்.

## வரப்புகள் உடைய மேட்டுக்கால் நெல்

### சி ஆர் தான் 101 (அங்கித்) (சி ஆர் 2702)




மிதமான உயரத்துடன் (95-100 செ.மீ) வளரக்கூடிய இந்த இரகம், 105-110 நாட்களில் முதிர்ச்சியடையும் தன்மைகொண்டது. 2014ம் ஆண்டில், ஒடிசா மாநிலத்திற்காக வெளியிடப்பட்ட இந்த இரகம், மானாவாரி நிலங்களில் நேரடி விதைப்பிற்கு ஏற்றது, வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்டது. இதன் நெல் மணிகள் நீண்டு சன்னமாக இருக்கும். இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 3.9 டன் ஆகும். நீண்ட, அடர்த்தியான கதிர்களுடைய இந்த இரகம் குலைநோய், பழுப்பு இலைப்புள்ளிநோய், இலை உறை அழுகல் நோய், இலைசுருட்டு புழு, குருத்து ஈ மற்றும் பச்சை தத்து பூச்சி ஆகியவற்றை ஓரளவு எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.

### சி ஆர் தான் 100 (சத்யபாமா) (சி ஆர் 2340-11)




நடுத்தரமான உயரத்துடன் (95-105 செ.மீ) வளரக்கூடிய இந்த ரகமானது 105-110 நாட்கள் முதிர்ச்சியடையும் தன்மைகொண்டது. சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்த இரகம், 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஒடிசாவின் வறட்சியான பகுதிகளுக்கு மிகவும் ஏற்றது. இதன் சராசரி மகசூல் மானாவாரியில் ஹெக்டருக்கு 2.8 டன்னும், இறவையில் 4.7 டன்னும் ஆகும். மேலும், இந்த ரகம் இலை சுருட்டுபுழு, குருத்து ஈ, வெள்ளை தத்துப்பூச்சி, புகையான், ஆனைக்கொம்பன் ஈ, இலைப்பேன், குலைநோய் மற்றும் நெல் துங்க்ரோ வைரஸ் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் திறனுடையது.

## சபாகி தான்
## (ஐ ஆர் 74371-70-1-1-சி ஆர் ஆர்-1)




100 நாட்கள் வயதுடைய இந்த ரகமானது, குட்டையாக (85-90 செ.மீ) வளரக்கூடியது. ஜார்க்கண்ட மாநிலத்தில் 2008ம் ஆண்டிலும், ஓடிசா மாநிலத்தில் 2011ம் ஆண்டிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. சாதகமான சூழலில் நன்கு வளர்ந்தாலும் வறட்சியையும் தாங்கி வளரும் திறனுடைய இந்த ரகமானது மேட்டுக்கால் நிலம் மற்றும் மானாவாரி நிலங்களில் நேரடி விதைப்பிற்கும், நன்செய் நிலங்களின் நாற்று நடவிற்கும் ஏற்றது. இதன் தானியம் தங்க நிறத்தில் நீண்டு தடித்து இருக்கும். இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 3.8 டன் முதல் 4.5 டன்னாகும். இது குலைநோயை எதிர்த்து வளரும் தன்மையுடையது. மேலும், பழுப்பு இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், தண்டுத்துளைப்பான் மற்றும் இலை சுருட்டுப்புழு ஆகிய நோய் மற்றும் பூச்சிகளை மிதமாக எதிர்க்கும் திறனுடையது.

## சி ஆர் தான் 40
## (காமேஷ்) (சி ஆர் ஆர் 383-22)




மிதமான உயரத்துடன் (100-110 செ.மீ) வளரக்கூடிய இந்த இரகம், 110 நாட்கள் வயது கொண்டது. வரப்புகளுடைய மேட்டுக்கால் நிலம் மற்றும் மானாவாரி மேட்டுக்கால் நிலங்களுக்கு ஏற்ற இரகமாகும். 2008ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் வறட்சி அதிகம் பாதிக்கும் இடங்களுக்கு சிறந்த இரகமாகும். அளவில் சிறிய தடித்த தானியம் கொண்ட இந்த இரகத்தின் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 3.0 முதல் 3.5 டன் ஆகும். பழுப்பு இலைப்புள்ளி நோய், குலைநோய், ஆனைக்கொம்பன் ஈ, வெள்ளைதத்து பூச்சி, தண்டுத்துளைப்பான் மற்றும் இலை சுருட்டுப் புழு ஆகியவற்றை மிதமாக எதிர்க்கும் திறனுடையது. மேலும், மானாவாரி நிலத்தின் நேரடி விதைப்பிற்கு சிறந்த இரகமாகும்.

## அன்னதா
## (சி ஆர் 222 - எம் டபிள்யூ 10)




ஓடிசா மாநிலத்தின் மேட்டுக்கால் நிலங்களுக்காக 1987ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், மேற்கு வங்காளம், மத்தியபிரதேசம், அசாம் மற்றும் கோவா மாநிலங்களில் 1988ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 110 நாட்கள் வயதுடைய இந்த இரகமானது மிதமான உயரம் (85-95 செ.மீ) வளரக்கூடியது. வறட்சியைத் தாங்கும் திறன் கொண்ட இந்த ரகம், காற்றின் வேகம் அதிகரித்தாலும் சாயாத தன்மை கொண்டது. சிறிய தடித்த நெல் மணிகளைக் கொண்ட இந்த இரகத்தின் மகசூல் சராசரியாக ஹெக்டருக்கு 4.0 முதல் 5.0 டன் வரை இருக்கும். மேலும், இந்த இரகம் குலைநோய் மற்றும் இலை உறை கருகல் நோய்களை மிதமாக எதிர்த்து வளரும் திறன் கொண்டது.

## உலர் மண் நெல் சூழலுக்கு ஏற்ற இரகங்கள்

## சி ஆர் தான் 206 (கோபிநாத்)




ஓடிசா மாநிலத்தில் 2015ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகமானது, 110 முதல் 115 நாட்கள் வயதுடன் மிதமான உயரம் (105 செ.மீ) வளரக்கூடியதாகும். உலர் மண் நெல் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இந்த இரகம் சிறிய தடித்த தானியம் மற்றும் அடர்த்தியான கதிர்களையும் கொண்டது. மேலும், 8-10 தூர்களுடன் 3.47 டன் வரையில் மகசூல் தரவல்லது. இது குலைநோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், இலைசுருட்டுப்புழு, தண்டுத்துளைப்பான், மற்றும் குருத்து ஈ ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.

## சி ஆர் தான் 205
## (சி ஆர் 2718-10 - ஐ ஆர் 83927-பி -பி -279)

மிதமான உயரம் (95-100 செ.மீ) வளரக்கூடிய இந்த இரகம், 110 நாட்கள் வயதுடையதாகும். சாயாத திறன் கொண்ட இந்த இரகம், நீர் குறைவாக உள்ள பகுதிகளில், உலர் மண் சாகுபடிக்காக 2015ம் ஆண்டில், சட்டீஸ்கர், ஓடிசா, மத்தியபிரதேசம், தமிழ்நாடு மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கு ஏற்ற இரகமாக அறிமுகப்படுத்தப்பட்டது. சிறிய தடித்த தானியமும், அடர்த்தியான கதிர்களுடைய இது ஹெக்டருக்கு 3.5 டன் மகசூல் தரவல்லது. மேலும், இந்த இரகமானது குலைநோய், இலை உறை அழுகல் நோய், இலைசுருட்டு புழு, தண்டுத்துளைப்பான், குருத்து ஈ மற்றும் இலைப்பேன் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.




## சி ஆர் தான் 204
## (சி ஆர் 2715-13 - ஐ ஆர் 84899-பி-154)

110 நாட்கள் வயதுடைய இந்த ரகமானது, சாயாத திறன் கொண்ட ஓரளவு குட்டையான இரகமாகும். நீர் குறைவாக உள்ள பகுதிகளில், உலர் மண் சாகுபடிக்காக வெளியிடப்பட்ட இந்த இரகம், ஜார்க்கண்ட மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கு ஏற்றது. இந்த இரகம், 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நடுத்தர, சன்னமாக

இருக்கும் இதன் நெல் மணிகள், அடர்த்தியான கதிர்களுடையது. இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 3.9 டன் ஆகும். குலைநோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், தண்டுத்துளைப்பான், இலைசுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் இலைப்பேன் ஆகிய நோய் மற்றும் பூச்சிகளை ஓரளவு எதிர்த்து வளரும் திறன் கொண்டது.




## சி ஆர் தான் 202
## (சி ஆர் 2715 -13 - ஐ ஆர் 84899-பி-154)

மிதமான உயரத்துடன் 110 நாட்கள் வயது கொண்ட இந்த இரகமானது, நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கும் மற்றும் உலர் மண் நெல் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. ஜார்க்கண்ட மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நெல் மணிகள் அளவில் சிறிதாக தடித்தும், நடுத்தர மற்றும் அடர்த்தியான கதிர்களை கொண்டிருக்கும் இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்ககு 3.7 டன் ஆகும். குலைநோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், தண்டுத்துளைப்பான், இலை சுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் இலைப்பேன் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை உடையது.




## சி ஆர் தான் 201
## (சி ஆர் 2721-81-3 - ஐ ஆர் 83380-பி-பி-124-1)

பீகார் மற்றும் சட்டீஸ்கர் மாநிலங்களுக்கு 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகமானது, 110 முதல் 115 நாட்கள் வயதுடன் மிதமான உயரத்துடன் (100 செ.மீ) வளரக்கூடியது. நீண்ட சன்னமான நெல்மணிகளைக் கொண்ட இந்த இரகத்தின் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 3.8 டன்னாகும். காற்றினால் சாயாத தன்மை கொண்ட இந்த இரகம், நீண்ட அடர்த்தியான கதிர்களையுடையது. குலைநோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், இலை உறை அழுகல் நோய், தண்டுத்துளைப்பான், இலை சுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் இலைப்பேன் ஆகியவற்றை மிதமான அளவு எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.




## சி ஆர் தான் 200
## (பியாரி) (சி ஆர் 2624 - ஐ ஆர் -55423-01)

இந்த இரகமானது ஒடிசா மாநிலத்தில் 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு வெளியடப்பட்டது. 115-120 நாட்களில் வளரும் தன்மையுள்ள இந்த இரகம், மிதமான உயரம் (95 செ.மீ) கொண்டது. சிறிய தடித்த தானியம் கொண்ட இந்த இரகத்தின் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.0 டன்னாகும். குலைநோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், மஞ்சள் தண்டுத்துளைப்பான மற்றும் இலை சுருட்டுபுழு ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.




## நன்செய் நிலங்களுக்கு ஏற்ற இரகங்கள்
## சி ஆர் தான் 306 (சி ஆர் கே 27)

மிதமான உயரம் (95-100 செ.மீ) கொண்ட இந்த இரகம், மத்திய கால வயது கொண்டதாகும் (120-125 நாட்கள்). பீகார், மத்தியபிரதேசம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் நன்செய் நிலங்களுககேற்ப உருவாக்கப்பட்டு 2015ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. சிறிய தடித்த தானியமும், ஒரு நெற்கதிருக்கு 280 நெல் மணிகளை கொண்ட நீண்ட அடர்த்தியான கதிர்களுடைய இந்த இரகம், 7-10 தூர்களுடன் ஹெக்டருக்கு சராசரியாக 6.0 டன் மகசூல் தரவல்லது. பழுப்பு இலைப்புள்ளி நோய், தண்டுத்துளைப்பான், இலைசுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் வெள்ளை தத்து பூச்சி ஆகிய நோய் மற்றும் பூச்சிகளை ஓரளவு எதிர்த்து வளரும் திறன் கொண்டது.




## சி ஆர் தான் 305 (சி ஆர் 2706)

மத்திய கால வயதுடையரகமான இது (125-130 நாள்), குட்டையான உயரத்துடன், காற்றினால் சாயாத தன்மை கொண்டது. 2013ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களில் உள்ள நன்செய் நிலங்களின் நாற்று நடவிற்கு மிகவும் ஏற்றது. நீண்ட மெல்லிய நெல்மணிகளுடைய இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 4.8 டன்னாகும். நீண்ட அடர்த்தியான கதிர்களுடைய இந்த இரகம் குலைநோய், பழுப்பு



இலைப்புள்ளிநோய், இலை உறை அழுகல் நோய், வெள்ளை தத்து பூச்சி, இலைசுருட்டு புழு, குருத்து ஈ மற்றும் பச்சை தத்து பூச்சி ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.

## சி ஆர் தான் 304
## (சி ஆர் 2644-2-6-4-3-2)



மிதமான உயரம் (110 செ.மீ) மற்றும் மத்திய கால வயதுடைய (125-130 நாட்கள்) இந்த இரகம் நன்செய் நிலங்களுக்கு ஏற்றது. ஓடிசா மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் நன்செய் நில சாகுபடிக்கு ஏற்ற வகையில், 2013ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம்ஆண்டு வெளியிடப்பட்டது. சிறிய, தடித்த, தானியம் கொண்ட இதன் சராசரி மகசூல், ஹெக்டேருக்கு 5.0-5.5 டன் ஆகும். ஆனைக்கொம்பன் ஈ உயிரினம்-1 எனும் பூச்சி இனத்தை எதிர்க்கும் திறன் கொண்டது.

## சி.ஆர் தான் 303
## (சி ஆர் 2649-7)



மத்திய கால வயதுடைய (125-130 நாட்கள்) இந்த இரகம் மிதமான உயரத்துடன் (110 செ.மீ) வளரக்கூடியது. மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம் மற்றும் ஓடிசா மாநிலங்களில் நன்செய் நிலங்களுக்காக இந்த இரகம் 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சராசரியாக ஹெக்டேருக்கு 5.0-5.5 டன் மகசூல் கொண்ட இதன் தானியம், சிறியதாக தடித்து இருக்கும். மேலும் இது குலைநோய், இலை உறை அழுகல் நோய் மற்றும் துங்க்ரோ வைரஸ் நோய்களை மிதமாக எதிர்த்து வளரக்கூடியது.

## சி ஆர் தான் 300 (சி ஆர் 2301-5)



மிதமான உயரம் (110-115 செ.மீ) வளரக்கூடிய இந்த இரகம், நீண்ட மத்திய காலவகையை (140 நாட்கள்) சார்ந்ததாகும். ஓடிசா, பீகார், குஜராத் மற்றும் மகராஷ்டிரா மாநிலங்களில் நன்செய் மற்றும் தாழ்வான நிலங்களுககேற்ப 2011ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2014ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நீண்ட மெல்லிய நெல்மணிகளையுடைய இதன் சராசரி மகசூலானது ஹெக்டேருக்கு 5.0-5.5 டன்னாகும். இலை சுருட்டு புழு மற்றும் குருத்து ஈக்களை எதிர்த்து வளரும் தன்மையும், வெள்ளை தத்து பூச்சி, ஆனைக்கொம்பன் ஈ, இலைப்பேன், தண்டுத்துளைப்பான், குலைநோய், இலை உறை அழுகல் நோய் மற்றும் துங்க்ரோ வைரஸ் நோய்களை ஓரளவு தாங்கி வளரும் தன்மையும் கொண்டது.

## மேம்படுத்தப்பட்ட லாலாட்
## (சி ஆர் - எம்ஏஎஸ் 2621-7-1)




மிதமான உயரத்துடன், மத்திய கால வயதுடைய (130 நாட்கள்) இந்த இரகம், 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு, ஓடிசாவில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் அதிகமாக தாக்கும் பகுதிகளுக்காக வெளியிடப்பட்டது. சமையலுக்கு உகந்த, நீண்ட மெல்லிய தானிய வகையை சேர்ந்த இந்த இரகத்தின் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.5-5.0 டன் ஆகும். இந்த இரகத்தில் பாக்டீரியா இலைக்கருகல் நோயை எதிர்த்து வளரும் திறன் இருப்பதால், இது அதிக மகசூல் தரும் பிரபல ரகமான லாலாட்டுக்கு இணையாக கருதப்படுகிறது. மேலும், இது ஆனைக்கொம்பன் ஈயை எதிர்த்தும், தண்டுத்துளைப்பான், குலைநோய், இலை உறை அழுகல் நோய் மற்றும் துங்க்ரோ வைரஸ் நோய்களை மிதமாக எதிர்க்கும் திறனும்கொண்டது.

## மேம்படுத்தப்பட்ட தபஸ்வினி
## (சி ஆர் - எம்ஏஎஸ் 2622-7-6)




ஓடிசாவில் பாக்டீரிய இலைக்கருகல் நோய் அதிகம் உள்ள பகுதிகளுக்காக 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகமானது மத்திய கால வயது (130 நாட்கள்) மற்றும் குட்டை (90 செ.மீ) இரகவகையை சார்ந்தது. மேலும், பாக்டீரியா இலைக்கருகல் நோயை எதிர்த்து வளரும் தன்மையுடையது. ஆனால் சாதாரண தபஸ்வினி இரகமானது, இலைக்கருகல் நோயால் பாதிக்கப்படும் இரகமாகும். சிறிய தடித்த தானியம் கொண்ட இந்த இரகத்தின் சராசரி மகசூலானது ஹெக்டேருக்கு 4.0 முதல் 5.0 டன் வரை இருக்கும். மேலும், முக்கிய பூச்சிகளான புகையான், வெள்ளை தத்துப்பூச்சி ஆகியவற்றை எதிர்த்தும், தண்டுத்துளைப்பானை மிதமாகவும் எதிர்க்கும் திறன்கொண்டது.

## சி ஆர் தான் 801
## (பால்குனி) (சி ஆர் ஏசி 2224-1041)




முன் மத்திய கால வயதுடைய (115-120 நாட்கள்) இந்த இரகமானது, மிதமான உயரம் வளரக்கூடியது. ஓடிசா மாநிலத்தின் நன்செய் நிலங்களுக்காக 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும். நீண்ட மெல்லிய தானியம் கொண்ட இதன் சராசரி மகசூலானது ஹெக்டேருக்கு 5.0-6.0 டன் ஆகும். குலைநோய், ஆனைக்கொம்பன் ஈ,

இலை சுருட்டு புழு, ஆகியவற்றை எதிர்த்தும், இலை உறைகருகல் நோய், துங்க்ரோ வைரஸ், பழுப்பு இலைப்புள்ளிநோய், மஞ்சள் தண்டுத்துளைப்பான், புகையான், வெள்ளை தத்துப்பூச்சி, கிரேசி தத்துப்பூச்சி ஆகியவற்றை மிதமாக எதிர்க்கும் திறன்கொண்டது.

## சி ஆர் தான் 10 (சத்யகிருஷ்ணா) (சி ஆர் ஏசி 2221-43)




ஒடிசா மாநிலத்தின் நன்செய் மற்றும் தாழ்வான பகுதிகளுக்காக 2008ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த மத்திய கால வயதுடைய (135 நாட்கள்) இரகமானது, மிதமான உயரம் (105 செ.மீ) வளரக்கூடியது. நீண்ட மெல்லிய தானியம் கொண்ட இதன் சராசரி மகசூலானது ஹெக்டேருக்கு 5.0-6.0 டன் ஆகும். குலைநோய் மற்றும் இலை உறை கருகல் நோய்களை எதிர்த்து வளரும் தன்மை கொண்டது. மஞ்சள் தண்டுத்துளைப்பான் மற்றும் ஆனைக்கொம்பன் ஈ ஆகியவற்றை மிதமாக எதிர்க்கும் திறனுடையது. மேலும், இந்த இரகம் குறைந்த அளவு தூர்களை கொண்டுள்ளதால் நெருக்கமான நடவிற்கு ஏற்றதாகும் (>50க்கும் மேற்பட்ட நாற்றுகள் /மீ²).

## நவீன் (சி ஆர் 749-20-2)




ஒடிசா, மேற்கு வங்காளம், திரிபுரா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களின் சாகுபடிக்கேற்ப 2005ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2006ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த ரகமானது, முன் மத்திய கால வயதுடன் (115-120 நாட்கள்) மிதமான உயரம் (105செ.மீ) வளரக்கூடியதாகும். நடுத்தர, தடித்த நெல்மணிகள் கொண்ட இதன் மகசூல் காரி·.ப் பருவத்தில் (ஜூலை - அக்டோபர்), ஹெக்டேருக்கு 4.0-5.0 டன் வரையிலும் ராபி பருவத்தில் (அக்டோபர் - மார்ச்) 5.0-6.0 டன் வரையிலும் இருக்கும். மேலும், குலைநோய் மற்றும் பழுப்பு இலைப்புள்ளி நோய்களை எதிர்த்து வளரக்கூடியது.

## சதாப்தி (சி ஆர் 146-7027-224)




முன் மத்திய கால வயதுடைய (120 நாட்கள்) இந்த ரகமானது, மிதமான உயரம் வளரக்கூடியது. மேற்கு வங்காள மாநிலத்திற்கு நன்செய் நில சாகுபடிக்கேற்ப உருவாக்கப்பட்ட இந்த இரகம், 2000ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நல்ல தரம் கொண்ட நீண்ட மெல்லிய நெல்மணிகளைக் கொண்ட இந்தரகத்தின் சராசரி மகசூல், ஹெக்டேருக்கு 4.0-5.0 டன்னாகும். பாக்டீரியா இலைக் கருகல் நோய், இலை உறைக் கருகல் மற்றும் அழுகல் நோய்களை மிதமாக எதிர்க்கும் திறனுடையது. மேலும், அனைத்து பருவசாகுபடிக்கும் ஏற்றது. ஏனெனில், இதன் முன்முதிர்வு திறன் காரணமாக, பருவ மழைக்கு முன்னரே அறுவடைக்கு தயாராகிவிடும் என்பதால், இந்தரகத்தினை வறண்ட சூழலிலும் சாகுபடி செய்யலாம்.

## கிட்டிஷ் (சி ஆர் 156-5021-207)



மேற்கு வங்காள மாநிலத்தின் நன்செய் நிலத்திற்கு ஏற்ப அதிக மகசூல் தரும் இந்த இரகம் 1982ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 1984ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. முன் மத்திய கால வயதுடைய (115-120 நாட்கள்) இந்த இரகமானது, மிதமான உயரம் (80-100 செ.மீ) வளரக்கூடியதாகும். அதிக அளவில் தூர்களையும், நீண்ட மெல்லிய நெல்மணிகளையும் கொண்ட இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.5-5.0 டன் ஆகும். குலை நோய் மற்றும் பாக்டீரிய இலைக்கருகல் நோய்களை மிதமாக எதிர்த்து வளரக்கூடியது. மேலும், வறண்ட நில சாகுபடிக்கு ஏற்றது.

## போரோ சூழலுக்கு ஏற்ற இரங்கள்

## சி ஆர் தான் 601 (சி ஆர் ஜி 1190-1)




வறண்ட நில சாகுபடிக்கு என வெளியிடப்பட்ட இந்த இரகம், நவம்பர் - டிசம்பர் மாதங்களில் நாற்றங்காலில் விதைக்கப்பட்டு போரோ சாகுபடியில் நீண்ட கால பயிராக (160-165 நாட்கள்) சாகுபடி செய்ய ஏதுவானதாகும். மேலும், கோடை காலம் மற்றும் காரீ·.ப் பருவங்களில் முன் மத்திய கால வயதுடைய (125-130 நாட்கள்) ரகமாக சாகுபடி செய்யவும் உகந்தது. சாயாத தன்மை கொண்ட இந்தரகம், 2011ம் ஆண்டு அசாம், ஒடிசா மற்றும் மேற்கு வங்காள மாநிலத்தின் போரோ சாகுபடி செய்யும் பகுதிகளுக்காக வெளியிடப்பட்டது. குளிரை தாங்கி வளரும் திறன் கொண்ட இது, மிதமான மெல்லிய நெல் மணிகளுடன், வெண்மையான அரிசியை கொண்டது. மேலும், நெருக்கமான, நெல் மணிகளுடன், நீண்ட மற்றும் அடர்த்தியான கதிர்களுடன், அகன்ற தடித்த, மேலோங்கிய இலைகளையும் உடையது. ஹெக்டருக்கு 5.0 டன் சராசரி மகசூல் கொண்ட இந்த இரகம், குலைநோய் மற்றும் துங்க்ரோ வைரஸ் நோய்களை எதிர்த்து வளரும். இலை உறை அழுகல் நோய் மற்றும் பழுப்பு இலைப்புள்ளி நோயை மிதமாக எதிர்த்து வளர்வதோடு, மஞ்சள் தண்டுத்துளைப்பான், பச்சை தத்துப்பூச்சி மற்றும் இலைசுருட்டு புழு ஆகியவற்றை மிதமாக தாங்கி வளரும் திறன் கொண்டது.

### சி ஆர் போரோ தான் 2 (சந்தன்) (சி ஆர் 898)




மிதமான சன்ன நெல் மணிகளை கொண்ட இந்த இரகம், ஹெக்டருக்கு 5.5-6.0 டன் மகசூல் தரவல்லது. இந்த இரகம், ஒடிசா மாநிலத்தில் போரோ நெல் சாகுபடிக்கு ஏற்ப 2008ம் ஆண்டு வெளியிடப்பட்டது. மத்திய கால வயதுடைய (125 நாட்கள்) இந்த இரகம், மிதமான உயரம் வளரக்கூடியதாகும். மஞ்சள் தண்டுத்துளைப்பான், புகையான், குலைநோய், பாக்டீரியா இலைக்கருகல் நோய் மற்றும் இலை உறை கருகல் நோய் ஆகியவற்றை தாங்கி வளரும் திறனும் கொண்டது.


## மித தாழ்வான பகுதிக்கு ஏற்ற இரகங்கள்

### சி ஆர் தான் 401 (ரீட்டா) (சி ஆர் 780-1937-1-3)

நீண்ட கால (145-150 நாட்கள்) வயதுடைய இந்த இரகமானது, மிதமான உயரம் (110 செ.மீ) வளரக்கூடியது. ஒடிசா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம் மாநிலங்களின் மித தாழ்வான நிலங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டு 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மிதமான சன்ன நெல் மணிகளையுடைய இது, ஹெக்டருக்கு 5.5 டன் தரவல்லது. குலைநோய், இலை உறை அழுகல் மற்றும் கருகல் நோய், பழுப்பு இலைப்புள்ளி நோய், தண்டுத்துளைப்பான் மற்றும் இலைசுருட்டுப்புழு ஆகியவற்றை தாங்கி வளரும் திறனுடையது. மேலும், இது ஒருவாரம் வரை நீர்தேங்கிய சூழலை தாங்கி நிற்கும் தன்மை கொண்டது.



### சுவர்ணா-சப்1 (சி ஆர் 2539-1)




ஒடிசாவின் தாழ்வான நிலங்களுக்கு ஏற்ப 2009ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், நீண்ட கால வயதுடையதாகும் (130 நாட்கள்). மேலும், மிதமான உயரம் (100 செ.மீ) வளரக்கூடியது. இந்த இரகத்தில் சப் 1 என்ற ஜீன் புகுத்தப்பட்டுள்ளதால் இது இரண்டு வார காலம் நீரில் மூழ்கி இருந்தாலும் தாங்கி வளரும் திறன் கொண்டது. ஆதலால் இது ஒரு பிரபலமானரகமாக கருதப்படுகிறது. மேலும், கடற்கரை பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினை தாங்கி வளரும் திறன்கொண்டது. இதன் கதிர்கள் நல்ல தோற்றத்துடன், மிதமான சன்ன நெல்மணிகளுடன், ஹெக்டருக்கு 5.0-5.5 டன் வரை சராசரி மகசூல் கொடுக்கவல்லது.

### பூஜா (சி ஆர் 629-256)




ஒடிசா, அசாம், மத்தியபிரதேசம் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களுக்கு ஏற்ப 1999ம் ஆண்டு தாழ்வான நிலபகுதியில் சாகுபடி செய்வதற்காக வெளியிடப்பட்டது. நீண்ட வயதும் (150 நாட்கள்), மிதமான உயரமும் (90-95 செ.மீ) கொண்ட இது, ஒரு பிரபல ரகமாகும். மிதமான சன்ன நெல் மணிகளையுடைய இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 5.0 டன் ஆகும். நெல் வயல்வெளியில் காணப்படும் முக்கியமான பூச்சி மற்றும் நோய்களை தாங்கி வளரும் திறன் கொண்ட இந்த இரகம், 25 செ.மீ உயரம் வரை நீர்தேங்கிய நிலையிலும் அதனை தாங்கி வளரும் தன்மை கொண்டது. மேலும், வயதான நாற்றுகள், பின் நடவிற்கு ஏற்றது.

### சாவித்ரி / பொன்மணி (சி ஆர் 1009) (சி ஆர் 210-1009)




நடுத்தர உயரமும் (110-120 செ.மீ) நீண்ட (150-155 நாட்கள்) வயதும் உடைய இந்த இரகம், 1982ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 1983ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு பிரபல இரகமாகும். தமிழ்நாட்டில் தாழ்வான பகுதியில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்ற இரகமாகும். சிறிய, தடித்த நெல் மணிகளையுடைய இது, அரவையில் அதிக சேதத்தை தவிர்ப்பதுடன், சாதம் செய்வதற்கு மிகவும் ஏற்றது. தென்னிந்தியாவின் பாரம்பரிய உணவுகளான இட்லி, தோசை போன்றவைகளுக்கு மிகவும் உகந்தது. வானம் மேகமூட்டமாக உள்ள நாட்களிலும் நன்றாக ஒளிச்சேர்க்கை செய்யும் திறன் கொண்டது. ஹெக்டருக்கு 5.0 டன் சராசரி மகசூல் கொண்ட இது, குலைநோய் மற்றும் இலை உறை கருகல் நோய் ஆகியவற்றை தாங்கி வளரும் தன்மையையும் உடையது.

## தாழ்வான பகுதிக்கு ஏற்ற இரகங்கள்

### சி ஆர் தான் 505 (சி ஆர் 2682-4-2-2-2-1)




160 நாட்கள் வயதுகொண்ட நீண்ட கால பயிரான இது, அதிக உயரத்துடன் (158 செ.மீ) சாயாத திறன் கொண்டதாகும். இந்த இரகம், ஒடிசா மற்றும் அசாம் மாநிலங்களின் தாழ்வான நிலபகுதிக்கு ஏற்ப 2013ம் ஆண்டு வெளியிடப்பட்டது. சிறிய தடித்த நெல் மணிகளையுடைய இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 4.3 டன் ஆகும். குலைநோய், உறைஅழுகல் நோய், துங்க்ரோ வைரஸ்நோய்களையும்,

மஞ்சள் தண்டுத்துளைப்பான், இலைசுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் இலைப்பேன் போன்ற பூச்சிகளையும் மிதமாக எதிர்த்து வளரும் திறனுடையது.

## சி ஆர் தான் 503
## (ஜெயந்திதான்) (சி ஆர் 2282-1-2-5-1)




ஒடிசா மாநிலத்தின் நீர் பிடிப்பு பகுதிகளின் சாகுடிக்கு ஏற்ப 2011ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2012ம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்த இரகமானது, நீண்ட கால (160 நாட்கள்) பயிராகும். மிதமான சன்ன நெல் மணிகளையுடைய இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.6 டன் ஆகும். மஞ்சள் தண்டுத்துளைப்பான், இலைசுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் இலைப்பேன் போன்ற பூச்சிகள் மற்றும் குலைநோய், இலை உறைகருகல் மற்றும் அழுகல் நோய், துங்க்ரோ வைரஸ் போன்ற நோய்களையும் மிதமாக எதிர்த்து வளரும் திறன் கொண்டது. மேலும், ஒரு மீட்டர் உயரம் வரை நீர் தேங்கி நிற்பினும் தாங்கி வளரும் தன்மையுடையது.

## சி ஆர் தான் 500
## (சி ஆர் 2285-6-6-31)



ஒடிசா மற்றும் உத்திரபிரதேச மாநிலத்தின் நீர் பிடிப்பு பகுதிகளுக்கு ஏற்ப 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2012ம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதிக உயரம் கொண்ட இந்த இரகம், ஒரு நீண்ட கால (160 நாட்கள்) பயிராகும். மிதமான சன்ன நெல் மணிகளுடைய இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 3.3 டன் ஆகும். இலைப்பேன் மற்றும் இலை சுருட்டு புழு ஆகியவற்றை எதிர்த்தும், குலைநோய், ஆனைக்கொம்பன் ஈ மற்றும் மஞ்சள் தண்டுத்துளைப்பான் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் திறனுடையது.

## வர்ஷாதான் (சி ஆர் எல் சி 899)




நீண்ட கால பயிரான (160 நாட்கள்) இது, அதிக உயரத்துடன் (150 செ.மீ) சாயாத திறன் பெற்ற பிரபலமான இரகமாகும். ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் மாநிலங்களில் தாழ்வான நிலபகுதியின் சாகுபடிக்கு ஏற்ப 2005ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2006ம் ஆண்டு வெளியிடப்பட்டது. நீண்ட தடித்த நெல்மணிகளை கொண்ட இந்த இரகத்தின் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.0 டன் ஆகும். குலைநோய், பாக்டீரிய இலைக்கருகல் நோய், இலை உறை அழுகல் நோய் மற்றும் வெள்ளை தத்துப்பூச்சி ஆகியவற்றை எதிர்த்து வளரும் திறன் கொண்டது. மேலும், 75செ.மீ அளவிற்கு தண்ணீர் தேங்கிநிற்பினும், தாங்கி வளரும் திறன் கொண்டதாகும்.

## சரளா (சி ஆர் 260-77)




நீண்டகால பயிரான (160 நாட்கள்) இது மிதமான உயரத்துடன் (110-120 செ.மீ) சாயாத திறன் கொண்டதாகும். இந்த இரகம் 2000ம் ஆண்டு, ஒடிசா மாநிலத்தின் மிதமான நீர் பிடிப்பு மற்றும் கடற்கரை பகுதிகளின் சாகுபடிக்கு ஏற்ப வெளியிடப்பட்டது. மிதமான மெல்லிய நெல்மணிகளை கொண்ட இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 4.5-5.0 டன் வரை இருக்கும், இந்த இரகத்தின் நெல் மணிகள் நல்ல தரம் வாய்ந்ததால் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. விதை உறக்க நிலையை கொண்டது. மேலும், 50 செ.மீ உயரம் வரை தண்ணீர் தேங்கினாலும் தாங்கி வளரும் திறனுடையது. மேலும், வயது முதிர்ந்த (50 நாட்கள்) நாற்றுகளை நட்டாலும் மகசூல் இழப்பு ஏற்படுவதில்லை.




## துர்கா (சி ஆர் 683-123)

ஒடிசாவின் தாழ்வான பகுதிகளின் சாகுபடிக்கேற்ப 2000ம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஓரளவு உயரம் (125-135செ.மீ) கொண்ட இது, ஒரு நீண்ட கால (160 நாட்கள்) பயிராகும். ஹெக்டருக்கு 4.5 டன் சராசரி மகசூல் கொடுக்கும் இந்த இரகம், மிதமான சன்ன இரக்தை சார்ந்தது. பாக்ட்டிரியா இலைக்கருகல் நோய், இலை உறை அழுகல் நோய், புகையான் போன்றவற்றை எதிர்த்து வளரும் தன்மை கொண்டது. மேலும், இந்த இரகம், உயரமாக வளரும் திறன் கொண்டது. எனவே நீரின் உயரம் அதிகரிக்கும் போது பயிரின் உயரமும் அதிகரிப்பதால் 100 செ.மீ உயரம் வரை நீர் தேங்கி நின்றாலும் தாங்கி வளரும் தன்மையுடையது.

## காய்த்ரி (சி ஆர் 210-1018)




ஒடிசாவின் தாழ்வான பகுதிகளுக்காக, 1988ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், மிதமான உயரம் (110 செ.மீ) கொண்ட நீண்ட கால (160 நாட்கள்) பயிராகும். மேற்கு வங்காளம், பீகார் மாநிலங்களுக்கு ஏற்றது. சிறியதடித்த நெல் மணிகளையுடைய இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 5.0 டன் ஆகும்.

திறன் கொண்ட இது, நீர்ப்பாசனம் மற்றும் போரோ சூழ்நிலைகளுக்கும் ஏற்றது. ஒடிசா மற்றும் அசாம் மாநிலங்களின் சாகுபடிக்கு ஏற்ப 2006ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், நல்ல தரமான நீண்ட சன்னரக நெல்மணிகளையுடையது. இதன் சராசரி மகசூல் ஹெக்டருக்கு 7.0-7.5 டன் வரை இருக்கும். தண்டுத்துளைப்பான், புகையான், வெள்ளை தத்துப்பூச்சி, ஆனைக்கொம்பன் ஈ, குலைநோய், மற்றும் பாக்டீரிய இலைக்கருகல் நோய் ஆகியவற்றை தாங்கி வளரும் திறன் கொண்டது. மேலும் இந்த வீரிய ஒட்டு ரகம், தூர் கட்டும் பருவத்தில் 7-10 நாட்கள் வரை நீர்தேங்கி நின்றாலும் அதனை தாங்கி வளரும் திறன் பெற்றது.

### அஜய் (சி ஆர் ஹெச் ஆர் 7)

ஒடிசா மாநிலத்தின் நீர்ப்பாசன மற்றும் தாழ்வான பகுதிகளுக்காக இந்த இரகம் 2005ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2006ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது மிதமான உயரம் (105-110 செ.மீ) வளரும் இரகத்தை சேர்ந்ததாகும். மத்திய கால (125-135 நாட்கள்) இரகமான இது, பிரபல வீரிய ஒட்டு இரகங்களில் ஒன்றாகும். நல்ல தரமான நீண்ட சன்ன நெல்மணிகளுடன், ஹெக்டருக்கு 7.0-7.5 டன் வரை சராசரி மகசூல் கொடுக்கவல்லது. குலைநோயை எதிர்த்தும், துங்க்ரோ வைரஸ் நோயை மிதமாக எதிர்த்தும், பாக்டீரிய இலைக்கருகல் நோய், தண்டுத்துளைப்பான், புகையான் ஆகியவற்றை தாங்கியும் வளரும் திறன் கொண்டது. தூர்கட்டும் பருவத்தில் 7-10 நாட்கள் வரை நீர் நின்றாலும் அதனை தாங்கி வளரும் திறன் கொண்டது.




### நறுமண நெல் இரகங்கள்

### சி ஆர் சுகந்த் தான் 907 (சி ஆர் 2616-3-3-3-1)

நீண்ட கால பயிரான (150 நாட்கள்) இந்த இரகம், குட்டையாக வளரும் இரகத்தை சேர்ந்ததாகும். 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், சட்டீஸ்கர், ஒடிசா, ஆந்திரபிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களில், நீர்ப்பாசனம் நிறைந்த பகுதிகளில் சாகுபடிக்கு ஏற்றது. மிதமான சன்னரக இவ்வகை நெல் சராசரியாக ஹெக்டருக்கு 4.5-5.0 டன் மகசூல் தரவல்லதாகும். குலைநோய் மற்றும் ஆனைக்கொம்பன் ஈக்களை எதிர்த்தும், இலை உறை அழுகல் நோய் மற்றும் மஞ்சள் தண்டுத்துளைப்பானை மிதமாக எதிர்த்து வளரும் திறனும் கொண்டது.




### சி ஆர் சுகந்த் தான் 902

### (பூர்ணாபோக்) (சி ஆர் எம் 2203-4)

நீண்ட கால (140-145நாட்கள்) நறுமண நெல் ரகமான இது, 2012ம் ஆண்டு ஒடிசாவின் நீர்ப்பாசன மற்றும் தாழ்வான நிலங்களின் சாகுபடிக்காக வெளியிடப்பட்டுள்ளது. நீண்ட சன்னரகமான இந்த இரகத்தின் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 4.5-5.0 டன்னாகும். குலைநோய் மற்றும் ஆனைக்கொம்பன் ஈக்களை எதிர்த்தும், இலை உறை அழுகல் நோய் மற்றும் மஞ்சள் தண்டுத்துளைப்பான் ஆகியவற்றை மிதமாக எதிர்த்தும் வளரக்கூடியது.




### நுவா சின்னிகாமினி (ஐ இ டி 18394)

நறுமண நெல் இரகத்தை சார்ந்த இது, 140 செ.மீ உயரம் கொண்ட நீண்டகால (145-150 நாட்கள்) பயிராகும். ஒடிசா மாநிலத்தின் தாழ்வான மற்றும் மானாவாரி பகுதிகளின் சாகுபடிக்கு ஏற்ப 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த இரகம், சிறிய தடித்த நெல் மணிகளுடன், ஹெக்டருக்கு 3.5 டன் வரை சராசரி மகசூல் தரவல்லது. இலையுறை அழுகல் நோய், குலைநோய், துங்க்ரோ வைரஸ், ஆனைக்கொம்பன் ஈ ஆகியவற்றை எதிர்த்தும், தண்டுத்துளைப்பானை மிதமாக எதிர்த்தும் வளரக்கூடியது. மேலும், இது நெருக்கமான நடவிற்கு மிகவும் ஏற்ற இரகமாகும்.




### நுவா கலாஜீரா (ஐ இ டி 18393)


ஒடிசா மாநிலத்தின் தாழ்வான பகுதிகளுக்காக 2008ம் ஆண்டு வெளியிடப்பட்ட நீண்ட கால பயிரான இந்த இரகம் (145 நாட்கள்), 140 செ.மீ உயரம் வரை வளரக் கூடியது. சிறிய, தடித்த மற்றும் கருப்பு உமியுடன் கூடிய வாசனை நிறைந்த நெல் மணிகளையுடைய இதன் சராசரி மகசூல், ஹெக்டருக்கு 3.0 டன் ஆகும். துங்க்ரோ வைரஸ் நோயை எதிர்த்தும், குலைநோய் மற்றும் இலை உறை அழுகல் நோய்களை மிதமாக எதிர்த்தும் வளரும் தன்மையுடையது. மேலும், இது நெருக்கமான நடவு மற்றும் இயற்கை விவசாயத்திற்கு மிகவும் ஏற்ற இரகமாகும்.



முக்கிய பூச்சி மற்றும் நோய்களை எதிர்த்து வளரும் தன்மையுடையது. வயதான நாற்றுகளும் நடவிற்கு ஏற்றது, மேலும், 50 செ.மீ நீர்தேக்கத்தையும் தாங்கி வளரும் தன்மையுடையது.

## கடலோர உவர் நிலங்களுக்கு ஏற்ற இரகங்கள்

### சி ஆர் தான் 406 (லூனா பரியல்) (சி ஆர் 2092-158-3)




நீண்ட கால இரகமான (150-155 நாட்கள்) இது, உவர் மண் நிலங்களுக்கு ஏற்றது. ஒடிசாவின் கடற்கரை நிலங்களின் சாகுபடிக்காக 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், சிறிய தடித்த தானியங்களுடன் சராசரியாக ஹெக்டருக்கு 3.9 டன் மகசூல் தரவல்லது. மஞ்சள் தண்டுத்துளைப்பானை எதிர்த்தும், இலையுறைக்கருகல் நோய் மற்றும் பாக்டீரியா இலைக்கருகல் நோயை மிதமாகவும் எதிர்த்து வளரும் தன்மையும் கொண்டது.

### சி ஆர் தான் 405
### (லூனா ஷன்க்ஹி) (சி ஆர் 2577-1)




முன் மத்திய கால இரகமான (110 நாட்கள்) இது, 2012ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2013ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், ஒடிசாவின் நீர்பாசன வசதியுடைய உவர் நிலங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. ஹெக்டருக்கு 4.6 டன் சராசரி மகசூல் கொண்ட இது, மிதமான சன்ன இரகத்தை சார்ந்தது. குலைநோயைத் தாங்கியும், இலை உறைக்கருகல் நோயை மிதமாக தாங்கியும் வளரும் தன்மையுடையது. மேலும் இந்த இரகம், வறட்சி காலங்களில் உவர் மண் நிலங்களின் சாகுபடிக்கு ஏற்றதாகும்.

### சி ஆர் தான் 403 (லூனா சுவர்னா)
### (சி ஆர் 2096-71-2)




நீண்ட கால இரகமான (150 நாட்கள்) இது, ஓரளவு உயரத்துடன் (135 செ.மீ), உவர் மண்ணை தாங்கி வளரும் திறன் கொண்டது. ஒடிசாவின் கடற்கரை நிலங்களின் சாகுபடிக்காக 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், மிதமான சன்ன தானியங்களுடன் சராசரியாக ஹெக்டருக்கு 3.5-4.0 டன் மகசூல் தரவல்லது. குலைநோயைத் தாங்கியும், மஞ்சள் தண்டுத்துளைப்பானை எதிர்த்தும், இலை சுருட்டு புழு, புகையான் போன்றவற்றை எதிர்த்து வளரும் தன்மை கொண்டது.

### சி ஆர் தான் 402
### (லூனா சம்பத்) (சி ஆர் எல் சி 2095-181-1)




நீண்டகால பயிரில் (140 நாட்கள்) நடுத்தர ரகமான இது, ஓரளவு உயரத்துடன் (130 செ.மீ), உவர் மண்ணை தாங்கி வளரும் திறன் கொண்டது. 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2011ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், ஒடிசாவின் கடற்கரை உவர் நிலங்களில் சாகுபடிசெய்ய ஏற்றது. மிதமான தடித்த நெல்மணிகளுடன், ஹெக்டருக்கு 3.6-4.2 டன் சராசரி மகசூல் கொடுக்கவல்லது. குலைநோயை முழுவதுமாக எதிர்த்தும், துங்க்ரோ வைரஸ், இலையுறை கருகல் நோய் மற்றும் தண்டுத்துளைப்பான் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் திறன்கொண்டது.

## வீரிய ஒட்டு இரகங்கள்

### சி ஆர் தான் 701 (சி ஆர் ஹெச் ஆர் 32)




நீண்ட கால இரகங்களில் (142-145 நாட்கள்), இந்தியாவில் உள்ள முதல் வீரிய ஒட்டு இரகம் இதுவே ஆகும். பீகார் மற்றும் குஜராத் மாநிலத்தின் தாழ்வான நிலங்களுக்கு ஏற்ப 2010ம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு 2012ம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த இரகம், மிதமான சன்ன நெல் மணிகளுடன், ஹெக்டருக்கு சராசரி மகசூல் 6.0-6.5 டன் தரவல்லது. நீர் தேங்கி நிற்கும் இடத்திலும், குறைந்த சூரிய ஒளியிலும் நன்கு வளரும் திறன் கொண்டது. துங்கரோ வைரஸ், பாக்டீரியா இலைக்கருகல் நோய், பச்சை தத்து பூச்சி, மற்றும் குலைநோய் ஆகியவற்றை மிதமாக எதிர்த்து வளரும் திறன் பெற்றது. டிசம்பர் மாத விதைப்பு மற்றும் வறண்ட கால சாகுபடிக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இரகமாகும்.




### ராஜலட்சுமி (சி ஆர் ஹெச் ஆர் 5)

பிரபல வீரிய ஒட்டு இரகமான இது, மிதமான உயரத்துடன் (105-110 செ.மீ) வளரக்கூடிய மத்திய கால (125-135 நாட்கள்) இரகமாகும். நாற்றங்காலில் குளிர்பனியை தாங்கும்